# ஜூன் 20-ல் திருவாரூரில் கலைஞர் கோட்டம் திறப்பு! மாவட்டங்கள் தோறும் கருத்தரங்கம்

## முதல்வர் - கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற கழக உயர்நிலை செயல்திட்டக்குழுக் கூட்டத் தீர்மானம்... முதல் பக்கத் தொடர்ச்சி

சூன் 3 - அன்று கிளைக் கழகங்கள் தொடங்கி, அனைத்து அமைப்புகளின் சார்பிலும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை வைத்து, கழகத் தோழர்கள் அனைவரும் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செய்திட, மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வட்ட - கிளைக் கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

**நவீனத் தமிழ்நாட்டைக் கட்டமைத்த சிற்பியான முத்தமிழறிஞர், நூற்றாண்டு நாயகர் கலைஞரின் புகழை, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவர் நெஞ்சிலும் நிலைபெறச் செய்யும் வகையில் அவரது நூற்றாண்டு விழாவினை முனைப்பாகவும் முழுமையானதாகவும் பயனுள்ள வகையிலும் ஆண்டு முழுவதும் கொண்டாடுவது எனக் கூட்டம் தீர்மானிக்கிறது.**

**“ஊர்கள்தோறும் தி.மு.க.” எங்கெங்கும் புதிய கொடிக் கம்பங்கள்!**

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கியபோது, அதன் கிளைக் கழகங்களை ஊர்தோறும் சென்று கொடியேற்றித் தொடங்கி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

75ஆம் ஆண்டில் கழகம் அடியெடுத்து வைக்க இருக்கும் நிலையில், கழகக் கொடிக்கம்பங்கள் இல்லாத கிராமங்களே தமிழ்நாட்டில் இல்லை என்னும் பெருமைமிகு நிலையை எட்டியிருக்கிறோம். தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினையொட்டி, “ஊர்கள்தோறும் தி.மு.க.” எனும் தலைப்பில், கிளைக் கழகங்களில் அமைந்துள்ள நமது பழைய கொடிக் கம்பங்களைப் புதுப்பிக்க வேண்டும்.

தமிழினத் தலைவர் நூற்றாண்டை முன்னிட்டு கழக மாவட்டங்கள்தோறும் அரசின் விதிமுறைகளைப் பின்பற்றி - அனுமதி பெற்று, “எங்கெங்கும் கலைஞர்” என்ற அடிப்படையில், கலைஞரின் முழு உருவச் சிலை, மார்பளவு சிலைகளை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நூற்றாண்டு நிகழ்ச்சிகளில் முக்கியமாக, கழக மாவட்டங்களில் உள்ள ஒன்றியம்/ நகரம்/ பகுதி/ பேரூர் அளவில் 70 வயதுக்கும் மேலான, அரும்பாடுபட்ட கழக மூத்த முன்னோடிகளுக்குப் “கழகமே குடும்பம்” எனும் தலைப்பில், பொற்கிழி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். கழகத்தின் மூத்த முன்னோடிகளின் இல்லங்களுக்கு கழக மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் சென்று கௌரவிக்க வேண்டும். அதோடு, மாணவர்கள், இளைஞர்கள் பங்கேற்கும் வகையிலான நிகழ்வுகளையும் போட்டிகளையும் நடத்தி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்றுச் சாதனைகளை அவர்களின் நெஞ்சில் பதியச் செய்திட வேண்டும். அவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதுடன், முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய புத்தகங்களையும் வழங்கிட வேண்டும். ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் கழகக் குடும்பங்களைச் சேர்ந்த 100 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குக் கல்வி உதவிகளை வழங்கிடலாம்.

**“என்றென்றும் கலைஞர்” அனைத்து மாவட்டங்களிலும் கருத்தரங்கம்!**

பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களைக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் “என்றென்றும் கலைஞர்” எனும் தலைப்பில், கருத்தரங்கம், பொதுக்கூட்டம் போன்ற நிகழ்வுகளும் நடத்தப்பட வேண்டும்.

இத்தகைய கூட்டம் நடைபெறும் இடம் - தேதி பட்டியலை மாவட்டக் கழக நிர்வாகம் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

படிப்பகங்களை உருவாக்கி மக்களை அறிவாற்றல் மிக்க ஜனநாயக சக்தியாக மாற்றிய இயக்கம், தி.மு.கழகம். இன்றைய சூழலுக்கேற்ப கணினி, இண்டர்நெட் வசதிகளுடன் கூடிய நவீனமான கலைஞர் நூற்றாண்டு படிப்பகங்களைத் தொடங்கிட வேண்டும். அது பொதுமக்களுக்கு உதவிடும் மையங்களாகத் திகழ்ந்திட வேண்டும்.

**நவீனத் தமிழ்நாட்டை கட்டமைத்த சிற்பி கலைஞரின் புகழ் பரப்புவோம்!**

கழகத்தில் உள்ள அனைத்து அணிகளின் சார்பிலும் ஓராண்டு முழுவதும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் செயல்திட்டத்தினை உருவாக்கி, தலைமைக் கழகத்தின் அனுமதியைப் பெற்று, இளைய தலைமுறை பயன்பெறும் வகையில் நடத்திட வேண்டும்.

நவீனத் தமிழ்நாட்டைக் கட்டமைத்த சிற்பியான முத்தமிழறிஞர், நூற்றாண்டு நாயகர் கலைஞரின் புகழை, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவர் நெஞ்சிலும் நிலைபெறச் செய்யும் வகையில் அவரது நூற்றாண்டு விழாவினை முனைப்பாகவும் முழுமையானதாகவும் பயனுள்ள வகையிலும் ஆண்டு முழுவதும் கொண்டாடுவது எனக் கூட்டம் தீர்மானிக்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## வடசென்னையில் ஜூன் 3-ல் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம்! மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர் பங்கேற்பு!

### நிவேதா எம்.முருகன் தலைமை! குண்டாமணி (எ) என்.செல்வராஜ் வரவேற்புரை!

## மயிலாடுதுறையில் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!. செ.இராமலிங்கம், குத்தாலம் பி.கல்யாணம். எம்.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

நாகை. மே 22-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகர தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் மயிலாடுதுறை சின்ன கடைத் தெருவில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமைத் தாங்கினார். மயிலாடுதுறை நகரச் செயலாளரும், நகர் மன்ற தலைவர் என்.செல்வராஜ் வரவேற்றார். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், மூவலூர் எம்.மூர்த்தி, ஞான.இமையநாதன், பி. முருகமணி, நகரக் கழக நிர்வாகிகள் நடராஜன், ஆர்.கே.சங்கர், மலக்கோயில் பிரபாகர், எஸ்.சிவக்குமார், வை.தெய்வநாயகம், என்.குமார், மேனகாமாரியப்பன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.மருது, நகர இளைஞர் அணி அமைப்பாளர் சக்திவிஜய், துணை அமைப்பாளர்கள் ரிஷிக்குமார், என்.இளங்கோவன், வி.மணிகண்டன், எஸ்.வினோத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் பால.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்துமகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, மாவட்டக் கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், ஏ.ஆர். ராஜா, எம்.அப்துல்மாலிக், அமுர்த விஜயகுமார், கு,வைத்தியநாதன், செல்ல சேதுரவிக்மார், மலர்விழிதிருமாவளவன், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், பஞ்சு, குமார், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கரநாராயணன், பி.சிவதாஸ், எஸ். வெற்றிவேல், நத்தம் ஏ.வின்சென்ட், பி.கென்னடி, சுபாநெடுஞ்செழியன், வி.சிவமணி மற்றும் ஒன்றியக் குழு தலைவர் ஜெயபிரகாஷ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் வி.எஸ்.என்.செந்தில், இரா.மனோகரன், இரா. செல்வராஜ், லதாசுப்பரமணியன், இராம.சேயோன், எம்.எஸ்.முத்துகுமார், நகர சார்பு அணி நிர்வாகிகள் வினோத்ரவி, சி.அருள்தாஸ், பிரபாகரன், ஜனதா பாலு, முருகதாஸ், ராஜேந்திரன் மற்றும் நகர, வார்டு கழக நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் நகர்மன்ற முன்னாள் உறுப்பினர் ஆர்.அசோக்குமார் நன்றி கூறினார்.

## “தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாக் குழு”

### தலைமைக் கழகம் அறிவிப்பு

“நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர்” அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலன் திட்டங்களையும் ஓராண்டு முழுவதும் எடுத்துரைத்தாலும் முழுமையடையாது என்றாலும், தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் அவரை என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட உரிய ஆலோசனைகளை மாவட்ட நிர்வாகத்துக்கு வழங்கிட தலைமைக் கழகத்தின் சார்பில் பின்வரும் குழு அமைக்கப்படுகிறது.

**ஆ. இராசா, எம்.பி.,**
**கனிமொழி கருணாநிதி, எம்.பி.,**
**திருச்சி சிவா, எம்.பி.,**
**தயாநிதி மாறன், எம்.பி.,**
**ஆர்.எஸ்.பாரதி**, முன்னாள் எம்.பி.,
**டி.கே.எஸ். இளங்கோவன்**, முன்னாள் எம்.பி.,

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.5.2023

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி முன்னிலையில்

## மானியத்துடன் வீடு கட்ட நகர்ப்புற கைத்தறி நெசவாளர்களுக்கு பணி ஆணைகள்!

### வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் வழங்கினார்!

நாமக்கல், மே 22 -

தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்களின் 2021 - 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் ஆண்டுக்கு ரூ. 21 கோடி கூடுதல் செலவினத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூ. 4 லட்சமாக உயர்த்தி அதனை நகர்ப்புற நெசவாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பினை அறிவித்திருந்தார்.

மேற்படி அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு கைத்தறி துறையின் கட்டுபாட்டில் இயங்கி வரும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் கண்டறியப்பட்ட கிராமப்புறத்தினை சார்ந்த 70 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் நகர்ப்புறத்தினை சார்ந்த 511 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.4 லட்சத்தில் மானியத்துடன் வீடு கட்டும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலை வகித்தார்.

நிகழ்வில் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் கலந்து கொண்டு தேர்வு செய்யப்பட்ட 13 பயனாளிகளுக்கு பணி ஆணைகளை வழங்கினார்.

## இந்தியாவில் குறைந்த கொரோனா பாதிப்பு!

புதுடெல்லி, மே 22-

இந்தியாவில் நேற்று ஒரே நாளில் 756 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதே போல் ஒரே நாளில் 8 பேர் கொரோனாவுக்கு உயிரிழந்துள்ளனர்.சீனாவில் முதன் முதலாக கண்டறியப்பட்ட கோவிட் 19 என்ற கொடிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவ தொடங்கியது. உலகம் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய கொரோனா வைரஸ் தற்போது சற்று குறைந்துள்ளது.

இந்தியாவிலும் இதன் பாதிப்பு பெரிய அளவில் தற்போது இல்லை.

எனினும் இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு முழுமையாக கட்டுக்குள் வரவில்லை. அந்த வகையில் நேற்று நாடு முழுவதும் கொரோனாவால் 756 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் 782 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று இந்த எண்ணிக்கை 756 ஆக குறைந்துள்ளது. இதுவரை 4,49,85,705 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகரக் கழகம் சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் 2 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் ஏ.வ.வேலு சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்,ஏ., மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ். சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், ஜெக.வீரப்பாண்டியன், குத்தாலம் க.அன்பழகன் தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம்,கடத்தூர் மேற்கு ஒன்றியம் ரேகடஹள்ளி,மோட்டாங்குறிச்சி, சுங்கரஹள்ளி,சில்லாரஹள்ளி, அரூர் கிழக்கு ஒன்றியம் தீர்த்தமலை, வேடகட்டமடுவு, மத்தியம்பட்டி,வீரப்பநாயக்கன்பட்டி, வேப்பம்பட்டி, பொன்னேரி, எல்லப்புடையாம்பட்டி, ஆகிய ஊராட்சிகளில் புதிய உறுப்பினர் சேர்க்கையை தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன்,ஆய்வு செய்தார். அரூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சந்திரமோகன்,கடத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சிவபிரகாசம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.சித்தார்த்தன்,கே.சென்னகிருஷ்ணன், மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் கு.தமிழழகன்,மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.